திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது மருத்துவமனை கட்ட இயலாவிட்டாலும், பகுதிநேர மருத்துவ மனையாவது அங்கு இயங்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 432, திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

432--

விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், சின்னசேலத்தில் உடல் ஊனமுற்றோர்க்குத் தொழிற்பயிற்சி நிலையம் ஏற்படுத்துதல்.

23690*–திரு. ஆர். பி. பரமசிவம்:**

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) விழுப்புரம்-இராமசாமி படையாச்சியார் மாவட்டம், சின்னசேலத்தில் உடல் ஊனமுற்றோருக்கான தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) ஆகவே, இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாழ்க்கையின் வடிவமைப்பு, வசந்தம் என்ன என்பதையே பார்க்க முடியாமல், கேட்கவே முடியாமல் இருக்கின்ற, தனது பிறவிப் பயன் வீணாகப் போய்விட்டது என்று சூனிய எண்ணத்தில் இருக்கின்ற இந்த ஊனமுற்றோர்கள், அவர்கள் தொழில் பயிற்சி மூலமாகத் தன்னம்பிக்கை பெறுகின்ற வகையில் ஒரு ஊன்றுகோலாக இருக்கிறது. ஆகவே, இவர்களுக்குத் தற்போது தமிழ்நாட்டில் எங்கெங்கு தொழில் பயிற்சி மையம் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 ஏப்ரல் 28]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது நாள்வரை வசந்தத்தைக் காணாமல் இருந்த இந்த ஊனமுற்றவர்கள் மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசிலேதான் வசந்தத்தைக் காண ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுக்கு என ஐந்து ஊனமுற்றோர் சிறப்பு பயிற்சி மையங்கள் இருக்கின்றன. பார்வையற்றவர்களுக்குப் பூந்தமல்லியிலும், பார்வையற்ற மகளிருக்காக பூந்தமல்லியிலும், காது கேளாதவர்களுக்குச் சிறப்பு மையம் கிண்டியிலும், ஊனமுற்றோருக்கான தொழிற்பயிற்சிக் கூடம் முட்டுக்காட்டிலும், அரசினர் தொழில் பயிற்சி நிலையம் அம்பத்தூரிலும் இயங்குகின்றன. இதற்கு 47 இலட்சத்து 64 ஆயிரம் ரூபாயை அரசு ஒதுக்கிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே, தென்னார்க்காடு மாவட்டத்தில் ஊனமுற்றவர்கள் இருப்பார்கள் என்றால் அவர்களை இந்தப் பயிற்சி மையங்களில் சேர்ப்பதற்கு அரசு நிச்சயமாக ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மாவட்டமாகப் பிறந்திருக்கின்ற எங்களது விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்டத்திலே சின்னசேலத்தில் இந்த உடல் ஊனமுற்றவர்களுக்குப் பயிற்சி மையம் அளிக்க முன் வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு, அதே நேரத்தில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த ஊனமுற்றவர்களுக்காக நேஷனல் இன்ஸ்டிடியூட் என்ற ஒன்றை ஆரம்பிக்க இருப்பதாகச் சொன்னார்கள். அது எந்த அளவிற்கு இருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன். மேலும், இந்தப் பயிற்சி பெற்றவர்களுக்குத் துறையின் மூலமாக மறுவாழ்வு எப்படி அளிக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன். இந்த ஊனமுற்றவர்கள் எத்தனை பேர்கள் படிக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இவர்களுக்கு ஒவ்வொரு இடத்திலும் 30 மாணவர்கள், 22 மாணவர்கள், 16 மாணவர்கள், 25 மாணவர்கள் என்று ஒவ்வொரு பிரிவிலும் பயிற்சி பெறுகிறார்கள். இப்படித் தொழில் பயிற்சி பெற்றதற்குப் பின்னால் இந்த மாணவர்களை அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்களில் தொழில் பயிற்சி பழகுவதற்காக அரசாங்கத்தினாலே நியமிக்கப்படுகிறார்கள். அப்படி நியமிக்கப்படுபவர்களுக்கு அரசாங்கமே 400 ரூபாய் மாதம் ஒன்றுக்கு உதவித்தொகையாக வழங்கிக் கொண்டிருக்கிறது. இவர்கள் இரண்டாண்டுக் காலத்திற்கு இந்தப் பயிற்சியை முடித்ததற்குப் பின்னால் அரசு இவர்களுக்குத் தனியார் பள்ளியிலும். இந்தப் பயிற்சி பெற்றவர்களுக்குத் தனியாருடைய

நிறுவனங்களிலும், அரசு நிறுவனங்களிலும் வேலை வாங்கித் தருவதற்கு உரிய உத்தரவாதத்தை ஏற்றுக்கொள்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினரவர்கள் நேஷனல் இன்ஸ்டிடியூட்டைப் பற்றிக் கேட்டார்கள். இரண்டாண்டுகளுக்கு முன்னால் நான் சட்டமன்றத்தில் இதைப்பற்றி அறிவித்தேன். மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நேஷனல் இன்ஸ்டிடியூட் அமைக்க வேண்டுமென்பதற்காக மத்திய அரசுக்குப் பலமுறை கடிதம் எழுதினார்கள். மற்ற மாநிலங்களிலே இது இருப்பதைப்போல தமிழகத்திற்கும் தர வேண்டுமென்று மத்திய சமூக நலத்துறை அமைச்சரவர்களுக்குத் தனிப்பட்ட முறையிலேயும் கடிதம் எழுதியிருக்கிறார்கள். ஆனால் மத்திய அரசு இதிலே இதுவரை எந்த நடவடிக்கையும் எடுத்து எங்களுக்குப் பதில் அனுப்பவில்லை. நாங்கள் இடம் கொடுத்திருக்கிறோம். இந்த நேஷனல் இன்ஸ்டிடியூட் அமையும் என்று சொன்னால், ஆயிரக்கணக்கான ஊனமுற்றவர்கள் அதனாலே பயன் பெறுவார்கள் பயிற்சி பெறுவார்கள். ஆனால் மத்திய அரசு இதைக் கிடைப்பிலே போட்டிருக்கிற காரணத்தினால் நாங்கள் இடம் கொடுத்து பயன் இல்லாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோர் பயிற்சி நிலையம், எங்களுடைய மாவட்டம், முட்டுக்காட்டில் உள்ளது. அதற்கு எவ்வளவு நிதி செலவு செய்யப்படும் என்பதை உங்கள் மூலமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்திலே இருக்கிற முட்டுக்காட்டைத் தான், 'நேஷனல் இன்ஸ்டிட்யூட்'டிற்கு இடமாகக் கொடுப்பதற்கு சிபாரிசு செய்திருக்கிறோம். அந்த முட்டுக்காட்டில், இப்போது உடல் ஊனமுற்றோருக்கான மூன்று சக்கர வண்டிகள் செய்யப்படுகின்றன. அந்த மூன்று சக்கர வண்டிகளையும், உடல் ஊனமுற்றோரே செய்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு ஏறக்குறைய 37 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது.

1994 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 433, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

433--

தமிழக அரசின் சார்பில் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் அமைத்தல்.

35208-டாக்டர் ஜெ. பரந்தாமன்:***

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) மக்கள் நலத்திட்டங்களை அரசு அறிவித்தவுடன் அவற்றை விளம்பரப்படுத்த தமிழக அரசின் சார்பில் ஒரு டி.வி. ஒளிபரப்பு நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் ஒளிபரப்பு துவங்கும்?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்போது இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகிலேயே பல முன்னோடி திட்டங்களான தமிழ்நாடு அரசின் நலத் திட்ட நிகழ்ச்சிகள், சென்னை தொலைக்காட்சி நிலையத்தால், சரியாக, முறையாக, முக்கியத்துவம் கொடுத்து ஒளிபரப்பப் படுவதில்லை. அதேபோல், தமிழக அரசுக்கு, குறிப்பாக, தமிழகத்தின் மாண்புமிகு நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு, முறையாக, ஒரு மாபெரும் மக்கள் சக்தி மிகுந்த மனிதருக்கு, வழங்கவேண்டிய நேரமும் வழங்குவதில்லை. உதாரணமாக, அறவழியில், தமிழ் மக்களின் உயிரைக் காக்க, தன் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல், தான் ஒருவரே உலகத் தமிழ் மக்களின் பிரதிநிதியாக காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்காக, சென்னையிலே உண்ணாவிரதம் இருந்தார்கள். நிமிடங்கள், நாட்கள், செல்லச் செல்ல, முதலமைச்சருடைய உடல்நிலை மோசம் அடைகிறது. பலவீனம் அடைந்து, சிறுநீரகம் பாதிக்கப்படும் அபாயநிலைக்கு, கிட்டத்தட்ட முதலமைச்சர் அவர்கள் நெருங்குகிறார்கள். அப்போது, முதலமைச்சரின் உண்ணாவிரதத்தை சில நொடிகள் மட்டுமே காட்டிவிட்டு, உடனடியாக வண்டலூர் மிருகக் காட்சிச் சாலையில், விலங்குகளுக்குத் தண்ணீர்ப் பஞ்சம் என்று விரிவாக. . . .